2003 ஏப்ரல் 11]

உணவு வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு விடுதிகளில் உணவுப் பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்த, விலைக் கட்டுப்பாடு ஆணையம் போன்ற அமைப்பு ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கம், உணவுப் பொருட்களின் உற்பத்தியில் ஏற்படும் செலவிற்கேற்ப, விலையில் மாற்றங்கள் செய்து வருகின்றது. என்றாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரிசிக்கு விதித்திட்ட வரியினைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே, ஹோட்டல்களில் ரூபாய் 50 இலட்சம் வரை turn-over செய்யப்படுகிறபோது, வரியே இல்லையென்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், நம்முடைய உறுப்பினர் சொல்லியதற்கிணங்க, என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அவை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 257, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

257—

குடிநீர்

•10436—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், முல்லையூர் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தினைச் சேர்ந்த முல்லையூர் கிராமம், கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு அரியலூர், செந்துறை, வேப்பூர் ஆகிய மூன்று ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள ஆய்வு செய்யப்பட்டு, இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்மிகு பேரவைத் தலைவர்: திரு. குரு, இருக்கையில் இல்லை.

வினா எண் 258, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

258—

பாதாளச் சாக்கடை

•35136—திரு. எஸ்.எம். சீனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, திருநகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை கட்டித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பரங்குன்றம் தொகுதி, திருநகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த பேரூராட்சியின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை. ஆகையால் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எம். சீனிவேல்: அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை